இந்திய உச்ச நீதிமன்றம்

உரிமையியல் மேல்முறையீட்டு அதிகாரவரம்பு

உரிமையியல் மேல்முறையீடு எண் *4626/2009*

மத்திய அரசுப் பணியாளர்
தேர்வாணையம் ... மேல்முறையீட்டாளர்

-எதிர்-

ஜவஉறர் சாந்த்குமார் மற்றும் பலர் ... எதிர்மேல்முறையீட்டாளர்கள்

உடன்

உரிமையியல் மேல்முறையீடு எண் *4628/2009*

தீர்ப்புரை

மாண்புமிகு நீதியரசர் திருமதி ஆர். பானுமதி:

இம்மேல்முறையீடுகள், நீதிப்பேராணை மனு எண் *33696/2007*-இல் மெட்ராஸ் உயர் நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட *17.04.2008*-ஆம் தேதியிடப்பட்ட எதிர்ப்புக்குள்ளான தீர்ப்புரையிலிருந்து எழுகிறது, இந்த நீதிப்பேராணை மனுவின் மூலம் உயர் நீதிமன்றம், தீர்ப்பாயத்தின் உத்தரவை நீக்கறவு செய்து, *2004*-ஆம் ஆண்டிற்கான இந்திய ஆட்சிப் பணிக்கான (இ.ஆ.ப.) பதவி உயர்வுகளை மறுஆய்வு செய்வதற்காக தேர்வுக் குழு கூட்டத்தைக் கூட்டவும், இதிலுள்ள முதல் எதிர்மேல்முறையீட்டாளரின் இளநிலையர்கள் பதவி உயர்வு பெற்றுவிட்டபோது அவருக்கு அத்தேதியிலிருந்து அனைத்து பின்னிட்ட பலன்களுடன் இ.ஆ.ப.-க்கு பதவி உயர்வு அளிக்கவும், மேல்முறையீட்டாளர்களுக்கும், மத்திய அரசுக்கும் (பணியாளர் மற்றும் பயிற்சித் துறை) உத்தரவிடப்பட்டது.

2. இந்த மேல்முறையீடுகள் தாக்கல் செய்ய வழிவகுத்த சுருக்கமான சங்கதிகள் கீழ்க்கண்டவாறு:-

மைய அரசால் தீர்மானிக்கப்பட்ட மூன்று காலிப் பணியிடங்களுக்கு 2004-ஆம் ஆண்டுக்கான இ.ஆ.ப.-இல் தமிழ்நாடு பணிநிலைப் பிரிவு பதவி உயர்வுக்கான தேர்வுக் குழு கூட்டம் 18.12.2004 அன்று நடைபெற்றது. 4 மற்றும் 5-ஆம் எதிர்மேல்முறையீட்டாளர்கள் பெயர்களோடு, முதல் எதிர்மேல்முறையீட்டாளர் பெயரும் மேற்படி குழுவால் பரிசீலிக்கப்பட்டது. தெரிவுப் பட்டியலில் சேர்க்கப்பட்ட அலுவலர்களுக்கு எதிர்முகமாக தகுதிப் பட்டியல் (த.ப.), தெரிவுப் பட்டியல் (தெ.ப.) மற்றும் ஒட்டுமொத்த ஒப்பீட்டுமுறை மதிப்பீடு (ஒ.ஒ.ம.) ஆகியவற்றில் முதல் எதிர்மேல்முறையீட்டாளருக்கு தேர்வுக் குழுவால் குறிக்கப்பட்டவாறான நிலை கீழ்க்கண்டவாறு:-

ஆண்டு	1-ஆம் எதிர்மேல்முறை-யீட்டாளரின் நிலை	தேர்ந்தெடுக்கப்பட்ட அலுவலர்களின் பெயர் மற்றும் நிலை			
தெ.ப. 2004		பெயர்	த.ப.	ஒ.ஒ.ம.	தெ.ப.
காலிப் பணியிடம்:3	த.ப.-இல் வ.எண்: 4	டி.கே. பொன்னுசாமி*	1	மிக நன்று	1
தெ.ப.-இன் அளவு:3	ஒ.ஒ.ம.: நன்று	என். மதிவாணன்	2	மிக நன்று	2
பரீசிலனைக்குரிய மண்டலம்: 9	தெரிவுப் பட்டியல்: சேர்க்கப்படவில்லை	திருமதி ஆர். வாசுகி	3	மிக நன்று	3
		*அவருக்கெதிராக நிலுவையிலுள்ள குற்றவியல் நடவடிக்கைகள் முடிவுக்கு வருவதற்குட்பட்டும் மாநில அரசால் நேர்மைச் சான்றிதழ் வழங்குவதற்குட்பட்டும் தற்காலிகமாக சேர்க்கப்பட்டுள்ளது.			

2004-ஆம் ஆண்டில் பதவி உயர்வுக்காக முதலாம் எதிர்மேல்முறையீட்டாளர் உரியமுறையில் பரிசீலிக்கப்பட்டு, அந்த ஆண்டில் "நன்று" என மதிப்பிடப்பட்டார்.

ஆயினும், ஒட்டுமொத்த ஒப்பீட்டுமுறை மதிப்பீட்டில் குறைத்து மதிப்பிடப்பட்டதன் காரணமாகவும், மேலும், தெரிவுப் பட்டியலின் சட்டப்படியான வரம்பளவின் காரணமாகவும், 2004-ஆம் ஆண்டு தெரிவுப் பட்டியலில் முதல் எதிர்மேல்முறையீட்டாளரின் பெயர் சேர்க்கப்படமுடியவில்லை. தெரிவுப் பட்டியலில் சேர்க்கப்பட்ட 4 மற்றும் 5-ஆம் எதிர்மேல்முறையீட்டாளர்கள், 29.4.2005-ஆம் தேதியிடப்பட்ட அறிவிக்கையின்படி இந்திய அரசால் நியமிக்கப்பட்டுள்ளனர்.

3. முதல் எதிர்மேல்முறையீட்டாளர் இ.ஆ.ப.-க்கு தன்னை நியமிக்காததால் மனக்குறையுற்று, மத்திய நிருவாகத் தீர்ப்பாயம் (ம.நி.தீ.) மெட்ராஸ் அமர்வு முன்பாக மு.வி. எண் 749/2006-ஐ தாக்கல் செய்தார். முதல் எதிர்மேல்முறையீட்டாளரின் பெயர் 2004-ஆம் ஆண்டு பரிசீலனைக்குரிய தகுதிவாய்ந்த அலுவலர்களின் பட்டியலில் மாநில அரசால் சேர்க்கப்பட்டது என்றும், அதன்படி, தேர்வுக் குழு, முதல் எதிர்மேல்முறையீட்டாளரின் ஆண்டு இரகசியப்பணி அறிக்கைகளைப் பரிசீலித்து பரிசீலனைக்குரிய அலுவலர்கள் அனைவரையும் ஒப்பீட்டுமுறை மதிப்பீடு செய்தது என்றும் தீர்மானித்து, 31.8.2007-ஆம் தேதியிடப்பட்ட உத்தரவின் மூலம் மேற்படி விண்ணப்பம் தீர்ப்பாயத்தால் தள்ளுபடி செய்யப்பட்டது. தேர்வுக் குழு பல்வேறு கலங்களில் குறிப்பிடப்பட்ட பதிவுக் குறிப்புகளின் அடிப்படையில் சுயமதிப்பீடு செய்து குழுக்குள்ளேயே விவாதம் செய்தபின் அலுவலர் ஒருவரை "மிகவும் திறமைவாய்ந்தவர்", "மிக நன்று", "நன்று" மற்றும் "தகுதியற்றவர்" என்றவகையில் இறுதியாக குறியீடு செய்தது எனத் தீர்ப்பாயம் சுட்டிக்காட்டியது. ஒப்பீட்டுமுறை மதிப்பீடு செய்ததில் தேர்வுக் குழுவால் எந்த முறைகேடும் செய்யப்படவில்லை எனக் கண்டறிந்து தீர்ப்பாயம், முதல் எதிர்மேல்முறையீட்டாளரால் தாக்கல் செய்யப்பட்ட விண்ணப்பத்தைத் தள்ளுபடி செய்தது. பின்னர் எதிர்மேல்முறையீட்டாளர் 31.8.2007-ஆம் தேதியிடப்பட்ட தீர்ப்பாயத்தின்

உத்தரவை மறுஆய்வு செய்யக்கோரி மு.வி. எண் 749/2006-இன் ம.வி. எண் 27/2007-இல் மறுஆய்வு விண்ணப்பத்தைத் தாக்கல் செய்தார். அந்த மறுஆய்வு மனு 3.10.2007-ஆம் தேதியிடப்பட்ட உத்தரவின் மூலம் தள்ளுபடி செய்யப்படலானது.

4. முதல் எதிர்மேல்முறையீட்டாளர் தனது விண்ணப்பம் தள்ளுபடியானதால் மனக்குறையுற்று, நீ.பே.ம. எண். 33696/2007-இல் நீதிப்பேராணை மனுவைத் தாக்கல் செய்தார். தீர்ப்பாயம், 26.6.2002-ஆம் தேதியிடப்பட்ட தனது உத்தரவின் மூலம் மாவட்ட வருவாய் அலுவலர் என்ற பணிப்பிரிவில் முதல் எதிர்மேல்முறையீட்டாளரின் பணிமூப்புநிலையினை நிர்ணயிப்பதற்காக உத்தரவிட்டது. ஆனால், முதல் எதிர்மேல்முறையீட்டாளரின் பணிமூப்புநிலை மாநில அரசால் உரிய காலத்திற்குள் மறுநிர்ணயம் செய்யப்படவில்லை. மேலும், முதல் எதிர்மேல்முறையீட்டாளரின் பணிமூப்பு 39 மாதங்கள் நீண்ட விளக்கப்படாத தாமதத்துடன் 5.9.2005-ஆம் தேதியிடப்பட்ட அ.ஆ. நிலை எண் 924 வாயிலாக மறுநிர்ணயம் செய்யப்பட்டது. இது நியாயமற்றது. இதற்கிடையில், அவரது இளநிலையர்களான 4 மற்றும் 5-ஆம் எதிர்மேல்முறையீட்டாளர்கள் இ.ஆ.ப.-க்கு பதவி உயர்வு பெற்றதால், இது முதல் எதிர்மேல்முறையீட்டாளருக்கு அதிக பாதிப்பு ஏற்படுத்திவிட்டது என உயர் நீதிமன்றம் தீர்மானித்தது. ஒழுங்குமுறை விதி 5(5)-இன்படி ஒரு தனிநபர் தேர்வுக் குழுவால் வகைப்படுத்தப்படுவது மிகவும் முக்கியமானதாகும். 2003-ஆம் ஆண்டுக்கான ஒட்டுமொத்த மதிப்பீட்டில் முதல் எதிர்மேல்முறையீட்டாளர் குழுவால் "மிக நன்று" என தீர்மானிக்கப்பட்டிருந்தார். ஆனால், 2004-ஆம் ஆண்டு தெரிவுப் பட்டியலுக்குத் தொடர்புடைய முதல் எதிர்மேல்முறையீட்டாளரின் ஒட்டுமொத்த மதிப்பீடு "நன்று" என இருந்தது. மேலும், முதல் எதிர்மேல்முறையீட்டாளரின் ஒட்டுமொத்த மதிப்பீட்டில் ஏன் அவர் திடீரென கீழ் இறக்கப்பட்டார் என்பது குறித்து காரணம் எதுவுமில்லை என்றும்

உயர் நீதிமன்றம் தீர்மானித்துள்ளது. 2003-ஆம் ஆண்டில் "தகுதியற்றவர்" என மதிப்பீடு செய்யப்பட்ட மற்றொரு நபரான திரு. டி. கே. பொன்னுசாமி, 2004-ஆம் ஆண்டில் "மிக நன்று" என மதிப்பிடப்பட்டார், திரு. டி.கே. பொன்னுசாமியின் வகைப்படுத்தலில்/ ஒட்டுமொத்த மதிப்பீட்டில் அத்தகைய திடீர் உயர்வுக்கான காரணம் ஏதும் அளிக்கப்படவில்லை என்பதையும் உயர் நீதிமன்றம் சுட்டிக்காட்டியது. திரு. டி.கே. பொன்னுசாமிக்கு எதிராக குற்றவியல் வழக்கு நிலுவையில் இருந்தபோதும், அவரைத் தெரிவுப் பட்டியலில் சேர்ப்பதற்காக அவருக்கு முதல் எதிர்மேல்முறையீட்டாளரைவிட முன்னுரிமையளிக்கப்பட்டது. இது அவ்வாறு மதிப்பீடு செய்யப்படமுடியாது என உயர் நீதிமன்றம் தீர்மானித்துள்ளது. தேர்வுக் குழுவும், தீர்ப்பாயமும் வழக்கின் அனைத்து அம்சங்களையும் மதிப்பீடு செய்யத்தவறிவிட்டன என உயர் நீதிமன்றம் தீர்மானித்து, தீர்ப்பாய உத்தரவினை நீக்கறவு செய்து, 2004-ஆம் ஆண்டுக்கான இ.ஆ.ப.-க்கான பதவி உயர்வுகளை மறுஆய்வு செய்வதற்காக தேர்வுக் குழு கூட்டத்தை கூட்டுவதற்கும், முதல் எதிர்மேல்முறையீட்டாளரை அவரது இளநிலையர்கள் பதவி உயர்வு பெற்ற நாளிலிருந்து அனைத்து பின்னிட்ட பலன்களுடன் இ.ஆ.ப.-க்கு பதவி உயர்வு அளிக்கவும் மேல்முறையீட்டாளருக்கும், 2 மற்றும் 3-ஆம் எதிர்மேல்முறையீட்டாளர்களுக்கும் உத்தரவிட்டது.

5. மனக்குறையுற்றதின்பேரில் மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணையம் (ம.அ.ப.தே.) மற்றும் தமிழ்நாடு அரசு இம்மேல்முறையீடுகளைத் தாக்கல் செய்துள்ளன. மேல்முறையீடுகள் கேட்புகைக்காக எடுத்துக்கொண்டபோது, முதல் எதிர்மேல்முறையீட்டாளர் அளவுக்குமீறியச் சொத்துகளை வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டின்பேரிலும், அவர்மீது திருச்சி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவால் பதிவு செய்யப்பட்ட குற்ற எண் 37/2008-இல் ஒரு குற்ற வழக்கில்

தொடர்புகொண்டிருந்தார் என்ற அடிப்படையிலும், 26.11.2011-ஆம் தேதியிடப்பட்ட அ.ஆ. நிலை எண் 1152 வாயிலாக பணியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார் என்பதும் இந்நீதிமன்றத்தின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது.

6. முதல் எதிர்மேல்முறையீட்டாளர் நீ.பே. எண் 28724/2011-இல் ஒரு நீதிப்பேராணை மனுவைத் தாக்கல் செய்து, 26.11.2011-ஆம் தேதியிடப்பட்ட பணிநீக்க உத்தரவை எதிர்த்தார் என்று முதல் எதிர்மேல்முறையீட்டாளருக்காக முன்னிலையான கற்றறிந்த மூத்த வழக்குரைஞர் திரு. எஸ். சத்தியம் ரெட்டி பணிந்துரைத்தார். உயர் நீதிமன்றம் 26.11.2011-ஆம் தேதியிடப்பட்ட மேற்படி பணிநீக்க உத்தரவைத் தள்ளுபடி செய்தது. அவ்வழக்கு புதிதாக பரிசீலிக்கப்படுவதற்காக அதிகாரமைப்புகளுக்குத் திருப்பியனுப்பப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. மேற்படி 26.11.2011-ஆம் தேதியிடப்பட்ட அ.ஆ. நிலை எண் 1125 ஒரு பின்னிட்ட நிகழ்வாதலால் நாங்கள் இந்த மேல்முறையீடுகளை அதன் சுயதகுதியின்பேரில் தன்னியலாக பரிசீலித்துள்ளோம்.

7. எதிர்ப்புக்குள்ளான தீர்ப்புரையை எதிர்த்து முதல் எதிர்மேல்முறையீட்டாளரின் பணிமூப்புநிலை உரியகாலத்திற்குள் நிர்ணயிக்கப்பட்டிருந்தால், முதல் எதிர்மேல்முறை-யீட்டாளர் இ.ஆ.ப.-க்கு பதவி உயர்வு பெற்றிருந்திருக்கக்கூடும் என்று உயர் நீதிமன்றம் தீர்மானித்து பிழைபுரிந்துவிட்டதாக மேல்முறையீட்டாளர்-ம.அ.ப.தே.-க்காக முன்னிலையான கற்றறிந்த வழக்குரைஞர் திருமதி/செல்வி பினு தம்தா பணிந்துரைத்தார். மேலும், முதல் எதிர்மேல்முறையீட்டாளர் தகுதிவாய்ந்தவர் மற்றும் அவர்மீது வழக்கேதும் நிலுவையில் இல்லை என்ற சங்கதியே, அவரது பெயரை தெரிவுப் பட்டியலில் சேர்த்திருக்கவேண்டும் என்பதை மறைமுகமாகக் குறிப்பிடுவதற்கான காரணமாக அமையாது என்றும் வாதிடப்பட்டது. மேலும், இ.ஆ.ப.-க்கு மாநில அரசுப் பணி அலுவலர்களிலிருந்து தேர்ந்தெடுப்பது என்பது முற்றிலும் தேர்வர்களின் சிறப்புத் தகுதி, திறமை மற்றும்

பொருத்தமுடைமை ஆகியவற்றின் அடிப்படையிலானது. மேலும், சிறப்புத் தகுதி, திறமை மற்றும் பொருத்தமுடைமை ஏறத்தாழ சரிசமமாக இருக்கும்போது மட்டுமே பணிமூப்புநிலை பரிசீலிக்கப்படுகிறது என்றும் கற்றறிந்த வழக்குரைஞர் வாதிட்டார். மேல்முறையீட்டாளருக்கான கற்றறிந்த வழக்குரைஞர் யூ.பி.எஸ்.சி. -எதிர்- இராஜையா மற்றும் பலர், *(2005) 10* **எஸ்.சி.சி.** *15* என்ற வழக்கின் மீது சார்ந்துநின்று, தேர்வுக் குழு அதன் சுய வகைப்படுத்துதலை வெளியிடலாம் என்றும், அது ஆண்டு இரகசியப்பணி அறிக்கைகளில் அளிக்கப்பட்ட தரநிலையுடன் மாறுபடலாம் என்றும், *2004*-ஆம் ஆண்டில் முதல் எதிர்மேல்முறையீட்டாளர் "நன்று" என வகைப்படுத்தப்பட்டிருப்பதை உயர் நீதிமன்றம் குறைகூறியிருக்கக்கூடாது என்றும் வாதிட்டுள்ளார். மேலும், திரு. டி.கே. பொன்னுசாமியின் மீது குற்றவியல் வழக்கு நிலுவையிலிருக்கையில் ஒழுங்குமுறை விதி *5(5)*-இன்படி தெரிவுப் பட்டியலில் அவரை சேர்த்திருப்பது தற்காலிகமானதே என்றும், அது உயர் நீதிமன்றத்தால் குறைகூறப்பட்டிருக்கக்கூடாது என்றும் கற்றறிந்த வழக்குரைஞர் பணிந்துரைத்தார்.

8. தமிழ்நாடு மாநில அரசுக்காக முன்னிலையான கற்றறிந்த வழக்குரைஞர் திரு. யோகேஷ் கண்ணா மேற்படி வாதங்களை மீண்டும் வலியுறுத்தி, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கேடுவிளைவிக்கும் மனப்பான்மையுடன் செயல்பட்டுள்ளனர் என்றும், இது எதிர்மேல்முறையீட்டாளர் மீது ஒரு முறைகேட்டை நிலைபெறச்செய்தது என்றும் உயர் நீதிமன்றம் தீர்மானித்தது சரியல்ல என்றும் வாதிட்டார்.

9. மாநில நிருவாகத் தீர்ப்பாயம் *26.6.2002*-ஆம் தேதியிடப்பட்ட அதன் உத்தரவின் வாயிலாக முதல் எதிர்மேல்முறையீட்டாளரை *4* மற்றும் *5*-ஆம் எதிர்மேல்முறையீட்டாளர்களுக்கு முதுநிலையராக வைத்து அவருடைய பணிமூப்பு நிலையினை மீட்டளித்திருக்கும்போது, மாநில அரசு முதல் எதிர்மேல்முறையீட்டாளரின்

பணிமூப்புநிலையினை நிர்ணயிக்கும் ஆணையை வேண்டுமென்றே தாமதமாக வெளியிட்டது என்றும், முதல் மேல்முறையீட்டாளரின் பணிமூப்புநிலை 5.9.2005-ஆம் தேதியிடப்பட்ட அ.ஆ. நிலை எண் 924-இன்படியாக நிர்ணயிக்கப்பட்டது என்றாலும், இதற்கிடையில் 2004-ஆம் ஆண்டு தெரிவுப் பட்டியலைத் தொடர்ந்து 4 மற்றும் 5-ஆம் எதிர்மேல்முறையீட்டாளர்களுக்கு 5.9.2005-ஆம் தேதியிடப்பட்ட அ.ஆ. நிலை எண் 924 என்ற அதே ஆணையின்படியாக இ.ஆ.ப.-க்கு பதவி உயர்வு அளிக்கப்பட்டது என்றும் முதல் எதிர்மேல்முறையீட்டாளருக்கான கற்றறிந்த மூத்த வழக்குரைஞர் வாதிட்டார். முதல் எதிர்மேல்முறையீட்டாளரின் பணிமூப்புநிலையினை மறுநிர்ணயம் செய்ததில் 39 மாத கால நீண்ட விளக்கப்படாத தாமதம் நியாயமற்றது என்றும், அது முதல் எதிர்மேல்முறையீட்டாளருக்கு கடுமையான பாதிப்பை ஏற்படுத்தியது என்றும் பணிந்துரைக்கப்பட்டது. மேலும், தேர்வுக் குழு பணிமூப்புநிலை வரிசையில் மாநில அரசுப் பணிகளிலுள்ள உறுப்பினர்களின் வழக்குகளைப் பரிசீலிக்கவேண்டும் என்று ஒழுங்குமுறை விதி 5(2) வரையறுக்கிறது என்றும், பணிமூப்புநிலை தெரிவுமுறையில் தாக்கத்தை ஏற்படுத்தும் என்றும் உயர் நீதிமன்றம் சரியாகத் தீர்மானித்துள்ளது என்று கற்றறிந்த மூத்த வழக்குரைஞர் பணிந்துரைத்தார். முதல் எதிர்மேல்முறையீட்டாளரை "மிக நன்று"-லிருந்து "நன்று" என்ற தரநிலைக்கு இறக்கப்பட்டதற்கான காரணங்கள் எதுவும் தேர்வுக் குழுவால் அளிக்கப்பட்டிருக்கவில்லை என்றும் பணிந்துரைக்கப்பட்டது. கறைபடிந்த முன்நடத்தைக்கொண்ட ஒரு நபர் (திரு. டி.கே. பொன்னுசாமி) முந்தைய சந்தர்ப்பத்தில் "தகுதியற்றவர்"-ஆக கண்டறியப்பட்டாலும் அவர் "மிக நன்று" என மதிப்பிடப்பட்டிருந்தார் என்றும், முதல் எதிர்மேல்முறையீட்டாளர் "மிக நன்று" என்றிலிருந்து "நன்று" என்ற தரநிலைக்கு இறக்கப்பட்டதற்கான காரணங்கள் ஏதுமில்லை என்றும் கற்றறிந்த வழக்குரைஞர் பணிந்துரைத்தார். ஆகவே, இதில்

சிந்தையை செலுத்தாததன் காரணமாக தேர்வுக் குழுவின் முடிவுகள் செல்லுபடியாகாதவை என உயர் நீதிமன்றம் சரியாகத் தீர்மானித்து, 2004-ஆம் ஆண்டுக்கான இ.ஆ.ப.-க்கு செய்யப்பட்ட பதவி உயர்வுகளை மறுஆய்வு செய்வதற்காக தேர்வுக் குழு கூட்டத்தைக் கூட்ட மேல்முறையீட்டாளர்களுக்கு சரியாகவே உத்தரவுகள் பிறப்பித்தது.

10. நாங்கள் இருதரப்பு வாதங்களையும் பரிசீலித்து, எதிர்ப்புக்குள்ளான தீர்ப்புரைகளையும், பதிவிலுள்ள பிற சான்றாவணங்களையும் கவனமாக ஆய்வுசெய்துள்ளோம். பரிசீலனைக்குரிய கூறு யாதெனில், தேர்வுக் குழு தனிப்பட்ட அலுவலர்களை வகைப்படுத்துவதில் சீரான தரநிலைகளைப் பின்பற்றவில்லை, இது இ.ஆ.ப.-க்கு அவர்களைத் தேர்ந்தெடுப்பதன்பேரில் நேரடி விளைவைக் கொண்டுள்ளது என்று உயர் நீதிமன்றம் தீர்மானித்தது சரியா? என்பதாகும். தேர்வுக் குழு மறுஆய்வுக் கூட்டத்தைக் கூட்டவும், முதல் எதிர்மேல்முறையீட்டாளருக்கு அவரது இளநிலையர்கள் பதவி உயர்வு பெற்ற நாளிலிருந்து அனைத்து பின்னிட்ட பலன்களுடன் இ.ஆ.ப.-க்கு பதவி உயர்வு அளிக்கவும் உத்தரவிட்டது சரியா? என்பது பரிசீலனைக்குரிய மற்றுமொரு கூறாகும்.

11. இந்திய ஆட்சிப் பணிகளில் நபர்களை பணியமர்த்துதல் மற்றும் பணி நிபந்தனைகளை முறைப்படுத்தும் நோக்கத்திற்காக அனைத்து இந்தியப் பணிகள் சட்டம் 1951 இயற்றப்பட்டுள்ளது. மேற்படி சட்டத்தின் பிரிவு 3-இன் கீழ் இ.ஆ.ப. (பதவி உயர்வு மூலமான நியமனம்) ஒழுங்குமுறை விதிகள் 1955 (பதவி உயர்வு ஒழுங்குமுறை விதிகள்)-ஐ மைய அரசு வனைந்துள்ளது. மேற்படி பதவி உயர்வு ஒழுங்குமுறை விதிகளின் வகைமுறைகளுக்கிணங்க, மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணையத் தலைவர்/உறுப்பினரால் தலைமை வகிக்கப்படும் தேர்வுக் குழு இந்திய ஆட்சிப் பணிக்கு

பதவி உயர்வு அளிப்பதற்காக மாநில குடிமைப் பணி அலுவலர்களைத் தேர்ந்தெடுக்கிறது. பதவி உயர்வு ஒழுங்குமுறை விதிகளின் ஒழுங்குமுறை விதி 5(1)-இல் இந்திய ஆட்சிப் பணிக்கான பதவி உயர்வுக்காக மாநில அரசுப் பணி நிலைப் பிரிவிலிருந்து பணியமர்த்தப்படுகின்ற ஒரு குறிப்பிட்ட ஆண்டில் தேர்ந்தெடுப்பதை முன்னிட்டு இருக்கக்கூடிய காலிப் பணியிடங்களின் எண்ணிக்கை, இந்திய அரசால் (ப.ப. துறை) சம்பந்தப்பட்ட மாநில அரசுடன் கலந்தாலோசித்து தீர்மானிக்கப்படுகிறது. அதன்பிறகு, மாநில அரசுப் பணி அலுவலர்களின் பணிமூப்புநிலைப் பட்டியல், தகுதிப் பட்டியல் (3 மடங்கு எண்ணிக்கையிலான காலிப் பணியிடங்கள்) நேர்மைச் சான்றிதழ்கள், ஒழுங்குமுறை நடவடிக்கைகள் தொடர்பான விவரங்கள், தகுதியான அலுவலர்கள் முதலானோரின் மீது விதிக்கப்பட்ட அபராதங்களின் விவரங்கள் மற்றும் தகுதியான அலுவலர்களின் முழுமையான ஆண்டு இரகசியப்பணி அறிக்கை ஆவணத் தொகுதிகள் ஆகியவற்றுடன் மாநில அரசு, ஆணையத்திற்கு ஒரு திட்டக் குறிப்பை அனுப்புகிறது. பணி நியமன ஆண்டுக்கான தேர்ந்தெடுப்பதற்காக தேர்வுக் குழு கூடுகிறபோது, மேற்படி ஆவணங்கள் பதவி உயர்வு ஒழுங்குமுறை விதிகளின் ஒழுங்குமுறை விதி 5(4)-இன் வகையங்களின்படியாக தேர்வுக் குழுவின் முன்பாக முன்னிடப்படும். குழு உரியமுறையில், தகுதிவாய்ந்த மாநில அரசும், குடிமைப்பணி அலுவலர்களின் பணிப் பதிவேடுகளின் ஒட்டுமொத்த ஒப்பீட்டுமுறை மதிப்பீட்டின்பேரில் "மிகவும் திறமைவாய்ந்தவர்", "மிக நன்று", "நன்று" அல்லது "தகுதியற்றவர்" என நேர்வுக்கேற்ப பரிசீலனை வளையத்திற்குள் அவர்கள் சேர்க்கப்பட்டு வகைப்படுத்துகிறது. அதன்பிறகு, பதவி உயர்வுகளின் ஒழுங்குமுறை விதிகளின் ஒழுங்குமுறை விதி 5(5)-இன் வகையங்களின்படி தேர்வுக் குழு முதலாவதாக "மிகவும் திறமைவாய்ந்தவர்"களாக வகைப்படுத்தப்பட்டு இறுதிசெய்யப்படும் அலுவலர்களிலிருந்தும் பின்னர் "மிக நன்று" என இதேபோன்று

வகைப்படுத்தப்பட்டவர்களிலிருந்தும் அதன்பிறகு "நன்று" என வகைப்படுத்தப்பட்ட அந்த அலுவலர்களுக்கிடையேயிருந்தும் தேவைப்படும் எண்ணிக்கையில் பெயர்களைச் சேர்த்து ஒரு பட்டியலைத் தயாரிக்கிறது. ஒழுங்குமுறை விதிகள் *5(4)* மற்றும் *5(5)*-இன் தொடர்புடைய பகுதிகள் பின்வருமாறு:-

> *"5(4).* தகுதிவாய்ந்த அலுவலர்களின் பணிப் பதிவேடுகளின் ஒட்டுமொத்த ஒப்பீட்டுமுறை மதிப்பீட்டின்போில் "மிகவும் திறமைவாய்ந்தவர்", "மிக நன்று", "நன்று" மற்றும் "தகுதியற்றவர்" என நேர்வுக்கேற்ப தேர்வுக் குழு வகைப்படுத்தவேண்டும்.
>
> *5(5).* தேர்வுக் குழு, முதலாவதாக "மிகவும் திறமைவாய்ந்தவர்"களாக வகைப்படுத்தப்பட்டு, இறுதி செய்யப்படும் அலுவலர்களிலிருந்தும், பின்னர் "மிக நன்று" என இதேபோன்று வகைப்படுத்தப்பட்டவர்-களிலிருந்தும், அதன்பின்னர் "நன்று" என இதேபோன்று வகைப்படுத்தப்பட்டவர்களிலிருந்தும் தேவைப்படும் பெயர்களைச் சேர்த்து, ஒவ்வொரு வகைகளுக்கிடையேயிருந்து எடுக்கப்படும் பெயர்களின் வரிசை, மாநில அரசு குடிமைப் பணியில் அவர்களின் பணிமூப்புநிலையின் வரிசையில் இருக்கும்படியாக பட்டியல் தயாரிக்கப்படவேண்டும்."

12. பதவி உயர்வுக்காக அலுவலர்களின் பொருத்தமுடைமையைப் பரிசீலிக்கையில், அனைத்திந்திய பணிகளுக்கு நியமனம் செய்யப்படும் விடயத்தில் ஒரே சீரான மற்றும் உறுதியான நடைமுறை பின்பற்றப்படுவதன்படி, தேர்வுக் குழு, ஒவ்வொரு

தகுதிவாய்ந்த அலுவலர்களின் பணிப் பதிவேடுகளை, கடந்த ஐந்தாண்டின்போது (தெரிவுப் பட்டியல் தயார்செய்யப்படும் ஆண்டுக்கு முன்னர்) அலுவலர்களின் செயலாக்கத்தை சிறப்புப் பார்வையோடு ஆராய்ந்தும், வெவ்வேறு ஆண்டுகளுக்கான ஆண்டு இரகசியப்பணி அறிக்கைகளில், அறிவிப்பு/மறுஆய்வு/ஏற்பு அதிகாரியால் பல்வேறு கலங்களில் குறிப்பிடப்பட்டவாறு அலுவலரின் தனித்திறனின்பேரில் ஆராய்ந்தும் பரஸ்பரமாக விரிவாக ஆராய்ந்து விவாதித்தப் பின்னர் ஒவ்வொரு அலுவலருக்கும் குறிக்கப்படவேண்டிய வகைப்பாட்டினை இறுதியாக அடைந்தது.

13. அவ்வாறு செய்கையில், இரகசியப்பணி அறிக்கையில் உள்ள ஒட்டுமொத்த தரநிலை, பல்வேறு குறிப்பிட்ட கூறுகளின் அல்லது சிறப்பியல்புகளின் கீழ் செய்யப்படும் தரநிலை/குறிப்புரைகளுடன் முரண்படுவதில்லை என்பதை உறுதிப்படுத்த இரகசியப்பணிமுறை அறிக்கைகளில் பதிவு செய்யப்படும் ஒட்டுமொத்த தரநிலையைத் தேர்வுக் குழு தீர்மானிக்கிறது. தேர்வுக் குழு, சம்பந்தப்பட்ட அலுவலர்களால் செய்யப்படும் திறமைமிக்க பணிகளுக்கான மதிப்பீடு தொடர்பான ஆணைகளைக் கருத்திற்கொள்வதோடு விதிக்கப்படும் அபராத ஆணைகளையும் அல்லது அலுவலருக்கு உரியமுறையில் தகவல் தெரிவிக்கப்படும் குறை குறிப்புரைகளையும் கருத்திற்கொண்டும், அவரது முறையீட்டினை உரியமுறையில் பரிசீலனை செய்தபிறகுங்கூட அவை நீக்கப்படுவதில்லை. மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணையம் ஒழுங்குமுறை விதி 6-இன் கீழ் மாநில அரசிடமிருந்து பெறப்படும் ஆவணங்களையும், பதவி உயர்வு ஒழுங்குமுறை விதிகளின் ஒழுங்குமுறை விதி 6(அ)-இன் கீழ் பெறப்படும் மைய அரசின் கருத்துரையையும் பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டபிறகு, பதவி உயர்வு ஒழுங்குமுறை விதிகளின் ஒழுங்குமுறை விதி 7-இன் வகையங்களுக்கிணங்க தேர்வுக் குழுவின் பரிந்துரையின்பேரில் இறுதிமுடிவை எடுக்கிறது. இ.ஆ.ப.-க்கு பதவி உயர்வு

அளிப்பதற்காக மாநில குடிமைப் பணி அலுவலர்கள் உரிய ஆவணங்களின் அடிப்படையிலும், உரிய விதிகளையும் ஒழுங்குமுறை விதிகளையும் பின்பற்றியும், நேர்மையான மற்றும் உண்மையான முறையிலும் தெரிவு செய்யப்படுகின்றனர். மேற்படி நடைமுறை, அனைத்து இந்திய பணிகளுக்கு பணிநியமனம் செய்யும் விடயத்தில் அனைத்து மாநிலங்கள்/பணிநிலைப் பிரிவுகளில் ஒரே சீராகப் பின்பற்றப்படுகிறது.

14. தற்போதைய வழக்கைப் பொறுத்தவரையில், *2004*-ஆம் ஆண்டுக்கான தகுதிவாய்ந்த அலுவலர்களின் பரிசீலனைப் பட்டியலில் முதல் எதிர்மேல்முறையீட்டாளரின் பெயர் மாநில அரசால் சேர்க்கப்பட்டது. அதன்படி தேர்வுக் குழுவும் ஆண்டு இரகசியப்பணி அறிக்கைகளைப் பரிசீலித்து, பரிசீலனையில் உள்ள அனைத்து அலுவலர்களையும் ஒப்பீட்டு, மதிப்பீடு செய்தது. முதல் எதிர்மேல்முறையீட்டாளருக்கு தேர்வுக் குழுவால் அளிக்கப்பட்ட ஒட்டுமொத்த தரநிலை குறைத்து மதிப்பிடப் பட்டிருந்தாலும் மூன்று காலிப் பணியிடங்கள் இருந்ததாலும், அவருடைய பெயர் *2004*-ஆம் ஆண்டு தேர்வுப் பட்டியலில் சேர்க்கப்படமுடியவில்லை. முதல் எதிர்மேல்முறையீட்டாளரின் பெயர் *2004*-ஆம் ஆண்டில் இந்திய ஆட்சிப் பணி நிலை பிரிவுக்குரிய பதவி உயர்வுக்கான தெரிவுப் பட்டியலில் சேர்க்கப்பட இயலாததால் அவர் பதவி உயர்வுக்காக பரிசீலிக்கப்படவில்லை.

15. முதல் எதிர்மேல்முறையீட்டாளரின் வாதம் யாதெனில், திரு. டி.கே. பொன்னுசாமியின் மீது குற்ற வழக்கு இருந்தபோதிலும், அவரது பெயர் தெரிவுப் பட்டியலில் சேர்க்கப்பட்டிருந்தது. குற்ற வழக்குடைய ஒரு நபர் தெரிவுப் பட்டியலில் சேர்க்கப்பட்டிருக்கும்போது முதல் எதிர்மேல்முறையீட்டாளரின் பெயரும் சேர்க்கப்பட்டிருக்கவேண்டும் என்பதாகும். *2003*-ஆம் ஆண்டு தெரிவுப் பட்டியலில் "தகுதியற்றவர்" என வகைப்படுத்தப்பட்ட திரு. டி.கே. பொன்னுசாமி

2004-ஆம் ஆண்டு தெரிவுப் பட்டியலில் "மிக நன்று" எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளார். திரு. டி.கே. பொன்னுசாமியின் வகைப்படுத்துதல்/ஒட்டுமொத்த மதிப்பீட்டில் திடீர் உயர்வு ஏற்பட்டதை இவ்வழக்கு முழுவதிலும் பதில் அளிக்கப்படாமல் விடப்பட்டுள்ளது என்றும் உயர் நீதிமன்றம் தீர்மானித்தது.

16. ஐயத்திற்கிடமின்றி, திரு. டி. கே. பொன்னுசாமியின் மீது குற்ற வழக்கு இருந்தபோதிலும், மேற்குறிப்பிட்டவாறு அவருக்கெதிராக நிலுவையிலுள்ள குற்ற வழக்கில் தீர்வு காண்பதற்குட்பட்டு 2004-ஆம் ஆண்டு தெரிவுப் பட்டியலில் தற்காலிகமாக சேர்க்கப்பட்டு, மாநில அரசால் நேர்மைச் சான்றிதழ் வழங்கப்பட்டது. மேலும் பரிசீலனை வளையத்திற்குள் சேர்க்கப்பட்டுள்ள அத்தகைய அலுவலர் ஒருவர் மீது ஒழுங்குமுறை நடவடிக்கைகள் நிலுவையில் இருந்தாலுங்கூட அவர் பரிசீலிக்கப்படவேண்டும். தேர்வுக் குழு சட்டப்படியான ஒழுங்குமுறை விதிகளுக்கிணங்க கண்டிப்புடன் செயல்பட்டுள்ளது என்றும், ஆதலால் 2 மற்றும் 3-ஆம் எதிர்மேல்முறையீட்டாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதில் சட்டப்படியான விதிமீறல் இல்லை என்றும் மேல்முறையீட்டாளர் ம.ஆ.ப.தே.-இன் வாதத்தில் சாரம் இருப்பதாக நாங்கள் காண்கிறோம்.

17. மாநில குடிமைப் பணியிலிருந்து இ.ஆ.ப.-க்கு தேர்ந்தெடுத்தல் என்பது அலுவலர்களின் சிறப்புத் தகுதி, திறமை மற்றும் பொருத்தமுடைமை ஆகியவற்றின்பேரில் முற்றிலும் அடிப்படையானதாகும். எம்.வி. திம்மையா மற்றும் பலர் -எதிர்- யூனியன் பப்ளிக் சர்வீஸ் கமிஷன் மற்றும் பலர், ***(2008) 2 எஸ்.சி.சி. 119*** என்ற வழக்கில் கீழ்க்கண்டவாறு தீர்மானிக்கப்பட்டுள்ளது:-

> "21. தற்போது தேர்வர்களைத் தெரிவுசெய்வது தொடர்பான பிரச்சினைக்கு வருகையில், சாதாரணமாகத் தேர்வுக் குழுவின்

பரிந்துரைகள் நல்லெண்ணமற்றதாகவோ, சட்டப்படியான விதிகளைக் கடுமையாக மீறியிருந்தாலோ அக்காரணத்தைத்தவிர அவற்றை எதிர்த்துரைக்க இயலாது. நீதிமன்றங்கள், மேல்முறையீட்டு நீதிமன்றத்தைப்போன்று தேர்வுக் குழு பரிந்துரைகளை ஆராய ஒரு மேல்முறையீட்டு அதிகாரமைப்பாக அமர்ந்துவிடமுடியாது. இந்த விருப்பதிகாரம் தேர்வுக் குழுவுக்கு மட்டுமே கொடுக்கப்பட்டுள்ளது. மேலும், நீதிமன்றங்கள் தேர்வர்களைத் தெரிவு செய்தலை ஆராய மேல்முறையீட்டு நீதிமன்றமாக அரிதாகவே அமர்கின்றன அல்லது ஒவ்வொரு தேர்வரையும் ஆய்வு செய்து கருத்தைப் பதிவு செய்வது நீதிமன்றத்தின் பணியல்ல.....

.....

36. ஆகவே, சங்கிலித் தொடர் போன்ற வழக்குகளைக் கருத்திற்கொண்டு பார்த்தால், நீதிமன்றங்கள் சாதாரணமாக ஆண்டு இரகசியப்பணி முறை அறிக்கைகளை மதிப்பீடு செய்வதற்கு ஒரு மேல்முறையீட்டு நீதிமன்றமாக அமராது, குறைந்தபட்சம் சட்டப்படியான தேர்வுக் குழுவுக்கு மேலாக ஒரு தனிப்பட்ட தேர்வுக் குழுவை அமைக்கும் இந்த அதிகாரத்தை தீர்ப்பாயத்திற்காவது வழங்கலாம். எவ்வாறு ஆண்டு இரகசியப்பணி அறிக்கைகள் மதிப்பீடு செய்யப்படவேண்டும் மற்றும் எவ்வாறு குறியீடு செய்யப்படவேண்டும் என்பது குறித்த வழிகாட்டுதல்கள் ஏற்கெனவே ஆணையத்தால் கொடுக்கப்பட்டுள்ளன. இந்த

வழிகாட்டுதல்கள் உரியமுறையில் ஆய்வு செய்யப்பட்டு, தேர்வுக் குழுவின் கருத்துரைகள் மட்டுமில்லாது மாநில அரசுகளின் கருத்துரைகளும் பெறப்பட்டு, இறுதியான ஆய்வுக்குப் பின்னர் ஆணையம் இறுதிப் பட்டியலைத் தயாரிக்கிறது. அது நியமனத்திற்காக மைய அரசுக்கு அனுப்பப்படுகிறது. இதுவும், பரிந்துரைக்கப்படும் நபர்கள் அனைவரையும் நியமிக்க மைய அரசைக் கட்டுப்படுத்துவதில்லை, மேலும் மைய அரசு, பதிவு செய்யப்படும் காரணங்களுக்காக தேர்வுப் பட்டியலில் அவ்வாறு குறிப்பிடப்பட்ட சில நபர்களின் நியமனத்தை நிறுத்திவைக்கலாம். ..... இந்த மதிப்பீடு தீயயெண்ணத்தால் தூண்டப்பட்டாலன்றி, இதனை நீதிமன்றம் அல்லது தீர்ப்பாயத்தின் ஆய்வுபொருளாக்க முடியாது.

37. ..... தேர்வுக் குழு சாதாரணமாக அறிவிப்பிடும் அலுவலராலும், மறு ஆய்வு அதிகாரியாலும் செய்யப்படும் மதிப்பீட்டை பின்பற்றுகிறது. ஆனால், தேர்வுக் குழு அதிகாரமற்றதாகும். தேர்வர்களின் செயலாக்கத்தை மறுஆய்வு செய்தபிறகு தேர்வுக் குழு நிச்சயமாக தனது சுயமதிப்பீட்டைச் செய்யலாம். ஆணையத்தால் வழங்கப்பட்டுள்ள வழிகாட்டுதல்களும், அறிக்கையிடும் அலுவலர் அல்லது மறுஆய்வு அலுவலரால் செய்யப்படும் குறிப்புரைகளை மதிப்பிட தேர்வுக் குழுவை இயல்விக்கிறது. பல்வேறு காரணிகளான செய்யப்படும் சிறப்பார்ந்த பணி அல்லது வழங்கப்படும் தண்டனை அல்லது தெரிவிக்கப்படும்

குறை குறிப்புரைகள் அல்லது முறையீட்டின்பேரில் பின்னிட்டு நீக்கப்படும் எதனையும் பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டபின், தேர்வர்கள் குறிப்பிட்ட மதிப்பீட்டை மறுஆய்வு செய்யலாம். அத்தகைய மதிப்பீட்டின் மறுஆய்வு, முற்றிலும் தேர்வுக் குழுவின் உரிமைக்குட்பட்டதாகும்....."

18. முன்னதாக சுட்டிக்காட்டப்பட்டவாறு, முதல் எதிர்மேல்முறையீட்டாளர் 26.6.2002-ஆம் தேதியிடப்பட்ட மாநில அரசு தீர்ப்பாயத்தின் உத்தரவுப்படி, மாவட்ட வருவாய் அலுவலர் என்ற பணிநிலைப் பிரிவுக்கு பதவி உயர்வு செய்யப்பட உத்தரவிடப்பட்டுள்ளது. ஆனால், முதல் எதிர்மேல்முறையீட்டாளரின் பணிமூப்புநிலை அ.ஆ. நிலை எண் 924-இன்படியாக 5.9.2005 அன்று மறுநிர்ணயம் செய்யப்பட்டது. ஐயத்திற்கிடமின்றி முதல் எதிர்மேல்முறையீட்டாளரின் பணிமூப்புநிலை 2004-ஆம் ஆண்டுக்கான தேர்வுக் குழு கூட்டத்திற்குப் பின்னர் மாநில அரசால் மறுநிர்ணயம் செய்யப்பட்டது. தீர்ப்பாயத்தின் உத்தரவுப்படி முதல் எதிர்மேல்முறையீட்டாளரின் பணிமூப்புநிலை உரிய காலத்திற்குள் நிர்ணயம் செய்யப்பட்டிருந்தால் முதல் எதிர்மேல்முறையீட்டாளரின் வகைப்படுத்துதல்/ஒட்டுமொத்த மதிப்பீடு தேர்வுக் குழுவால் சரியாக மதிப்பிடப்பட்டிருக்கக்கூடும். மேலும், ஒரு தேர்வரின் நேர்மை சந்தேகத்திற்கிடமாக கருதப்படுகிறபோது முதல் எதிர்மேல்முறையீட்டாளரும் நிச்சயமாக பரிசீலிக்கப்பட்டு, இ.ஆ.ப.-க்கு பதவி உயர்வு அளிக்கப்பட்டு இருந்திருப்பார். மாநில அரசின் காலதாமதமான நடவடிக்கையின் காரணமாகவும் அல்லது தேர்வுக் குழுவின் முறையற்ற நடவடிக்கைகளாலுமே உண்மையான தேர்வரின் வாய்ப்புநலம் பாதிப்படைந்துவிடக்கூடாது. அக்காண்முடிவுகளுடன் முதல் எதிர்மேல்முறையீட்டாளர், அவரது உண்மையான குறைகளின் தீர்வுக்காக நீதிமன்றத்தை அணுகியுள்ளார் என்ற

சாதாரண காரணத்திற்காக அவர் துயரத்திற்குள்ளாக்கப்பட்டுள்ளார் என்ற கருத்தை உயர் நீதிமன்றம் எடுத்தது.

19. முதல் எதிர்மேல்முறையீட்டாளருக்கான கற்றறிந்த மூத்த வழக்குரைஞர் உயர் நீதிமன்றக் காண்முடிவுகளை வலியுறுத்தி, தீர்ப்பாயத்தால் உத்தரவிடப்பட்டவாறு முதல் எதிர்மேல்முறையீட்டாளரின் பணிமூப்புநிலையினை உரியகாலத்திற்குள் நிர்ணயம் செய்யாததால், அவரது பதவி உயர்வினைப் பெறுவதற்கான வழக்கு பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளதாக உயர் நீதிமன்றம் சரியாகவே கருத்துரைத்ததாகப் பணிந்துரைத்துள்ளார். ஒழுங்குமுறை விதி *5(2)*-இன்படி மாநில குடிமைப் பணியாளர்களைத் தெரிவுப் பட்டியலில் சேர்ப்பதற்காக பணிமூப்பின் படிநிலையினைக் குழு பரிசீலிக்கவேண்டும் மற்றும் பணிமூப்புநிலையினை மறுநிர்ணயம் செய்ததில் காலதாமதமானதாலே முதலாம் எதிர்மேல்முறையீட்டாளரின் பெயர் தெரிவுப் பட்டியலில் சேர்க்கப்பட இயலவில்லை எனக் கற்றறிந்த மூத்த வழக்குரைஞர் சமர்ப்பித்துள்ளார்.

20. முதல் எதிர்மேல்முறையீட்டாளரின் பணிமூப்புநிலை, தெரிவுப் பட்டியலில் அவரது பெயரைச் சேர்த்திருப்பதற்கேதுவாக இருந்திருக்கக்கூடும் என்ற முதல் எதிர்மேல்முறையீட்டாளரின் வாதத்தில் தகுதியேதுமில்லை என நாங்கள் காண்கிறோம். முன்னதாக விவாதிக்கப்பட்டவாறு ஒப்பீட்டுமுறை மதிப்பீட்டின் அடிப்படையில் சிறப்பு தகுதியின்பேரில் தேர்வுக் குழுவால் தரநிலை முறை வழங்கப்படுகிறது. தேர்வர்களின் சிறப்புத் தகுதி சரிசமமாக இருக்கிறபோதுதான் பணிமூப்புநிலை பொருத்தமுடையதாகும். ஆர்.எஸ். தாஸ் -எதிர்- யூனியன் ஆ.ப் இந்தியா மற்றும் பலர், *1986* ***(சப்ளி.) எஸ்.சி.சி.*** *617*-இல் சிறப்புத் தகுதி, திறமை மற்றும் பொருத்தமுடைமை ஆகியவை ஏறத்தாழ சரிசமமாக இருக்கும்போதுதான் பணிமூப்புநிலை பரிசீலிக்கப்படுகிறது என்று கருத்துரைத்து உச்ச நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு தீர்மானித்துள்ளது:-

"18. ஒழுங்குமுறை விதி 5-இன் திருத்தப்பட்ட வகையங்கள் சிறப்புத் தகுதிக்கு முக்கியத்துவம் கொடுப்பதால், தெரிவுமுறையில் பணிமூப்புநிலையின் பங்கு கட்டுப்படுத்தப்பட்டு குறைக்கப் பட்டுள்ளன. தற்போது குழு, தகுதிவாய்ந்த அலுவலர்களின் பணிப் பதிவேடுகளை ஒட்டுமொத்த ஒப்பீட்டுமுறை மதிப்பீட்டின் பெயரில் "மிகவும் திறமைவாய்ந்தவர்", "மிக நன்று", "நன்று" மற்றும் "தகுதியற்றவர்" என நான்கு வெவ்வேறு வகைகளின் கீழ் வகைப்படுத்தவேண்டியதாகிறது. வகைப்படுத்திய பிறகு, ஒழுங்குமுறை விதி 5(5)-இல் வகுக்கப்பட்டுள்ள நடைமுறைக்கிணங்க தெரிவுப் பட்டியலில் உள்ள அலுவலர்களின் பெயர்களைக் குழு வரிசைப்படுத்தவேண்டும். தெரிவுப் பட்டியலில் பெயர்களை வரிசைப்படுத்துகையில் ஒவ்வொரு வகைக்குள்ளும் உள்ள அலுவலர்களுக்கிடையேயான பணிமூப்பு நிலையினைப் பின்பற்றவேண்டும். "மிகவும் திறமைவாய்ந்தவர்" என்ற வகைக்குள் வரும் ஐந்து அலுவலர்களின் பெயர்கள், மாநில குடிமைப் பணியில் அவர்களுக்கிடையேயான பணிமூப்புநிலையினைக் கருத்திற்கொண்டு, அப்படிநிலையில் வரிசைப்படுத்தப்படவேண்டும். "மிக நன்று" மற்றும் "நன்று" என்றவகையில் வருகின்ற அலுவலர்களுக்கிடையிலிருந்து பட்டியலை வரிசைப்படுத்துவதில் இதேகொள்கை பின்பற்றப்படுகிறது. அதேபோல், இளநிலை அலுவலர் ஒருவரின் பெயரானது "மிகத் திறமையானவர்" என்ற வகையில் இடம்பெறுமானால் அவர் "மிக நன்று" அல்லது

"நன்று" என்று சேர்க்கப்பட்ட முதுநிலை அலுவலர் ஒருவரைவிட முன்னுரிமை அளிக்கப்பட்டு பட்டியலில் உயர்ந்த இடத்தில் இடம்பெறுவார். இம்முறையில் இளநிலை அலுவலர் ஒருவர் "மிகவும் திறமையானவர்" அல்லது "மிக நன்று" என்று வகைப்படுத்தப்பட்டாரெனில், அவர் அவருடைய மூத்தவர்கள் இடத்தைப் பற்றிக்கொள்வார். ஓர் உயர் பணிக்கு பதவி உயர்வு அளிப்பதற்காக, சிறப்புத் தகுதியின் அடிப்படையில் மட்டுமே தெரிவுசெய்கிறபோது இது உதவி செய்துவிடாது, அலுவலர் ஒருவர் பணியில் இளநிலையராக இருந்தாலும், மூத்தவரைவிட அவருக்கு முன்னுரிமை அளித்து, தெரிவு செய்யப்பட்டால் அது திட்டவட்டமாக உரிமை மேற்கடப்பாகாது. பணிமூப்பு அடிப்படையில் பதவி உயர்வு அளிக்கப்படுகிறவிடத்து, அவரது இளநிலையவரைவிட மூத்தவருக்கு பதவி உயர்வுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது. ஆனால், பதவி உயர்வானது சிறப்புத் தகுதியின் அடிப்படையிலே அளிக்கப்படுகிறது என்றால், மூத்த அலுவலர் பதவி உயர்வுக்கு சட்டப்படியான உரிமையை பெறமாட்டார். அவருக்கு இளநிலையர்கள் சிறப்புத் தகுதியின் அடிப்படையில் பதவி உயர்வுக்கு தேர்ந்தெடுக்கப்படுவார்கள் எனில், மூத்த அலுவலர் சட்டரீதியாக உரிமை மேற்கடப்பு செய்யப்படுவதில்லை. சிறப்புத் தகுதி என்பது பணியிலுள்ள பணியாளர்களுக்கான, தெரிவுக்கான அளவுகோலாக இருக்கிறபோது, எந்த அலுவலரும் மற்றவர்களுடன் சேர்த்து

பரிசீலிக்கப்படவேண்டிய உரிமையை மட்டும் கொண்டுள்ளாரே தவிர, பதவி உயர்வுக்காக தெரிவு செய்யப்படவேண்டிய சட்ட உரிமையை அல்ல. குர்தயாள் சிங் பிஜி -எதிர்- பஞ்சாப் மாநில அரசு, *(1981) 4* எஸ்.சி.சி. *419* என்ற வழக்கில் இந்நீதிமன்றம், மாநில அரசின் குடிமைப் பணியிலுள்ள உறுப்பினர் ஒருவர், மற்றவருடன் சேர்த்து பரிசீலிக்கப்படுவதற்கான உரிமைகொண்டிருக்கிறாரே தவிர, பதவி உயர்வுக்கான சட்ட உரிமையை அல்ல என்று தீர்மானித்தது. ஆனால், தெரிவுப் பட்டியலில் மேல்முறையீட்டாளர்/மனுதாரருக்கு இளநிலையரான அலுவலர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர் என்ற காரணத்திற்காக அவர்கள் மேற்புகுத்தப்பட்டனர் என்று அனுமானித்தாலுங்கூட, திருத்தப்பட்ட சட்ட வகையங்களைக் கருத்திற்கொண்டு எந்தக் காரணமும் பதிவு செய்யப்படவேண்டியதில்லை."

21. **குறைத்து மதிப்பிடுதல் மற்றும் காரணங்கள் பதியாமை குறித்த வாதம் தொடர்பாக:-** *2003*-ஆம் ஆண்டின் தெரிவுப் பட்டியல் தொடர்புடைய *24.12.2003*-ஆம் தேதியிடப்பட்ட ம.ஆ.ப.தே.-இன் கோப்பு எண் எ.ஃப்.*6/18/2003*-ஏ.ஐ.எஸ்.-லிருந்து முதலாம் எதிர்மேல்முறையீட்டாளரின் ஒட்டுமொத்த ஒப்பீட்டுமுறை மதிப்பீடு, குழுவால் "மிக நன்று" எனத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. ஆனால், *2004*-ஆம் ஆண்டின் தெரிவுப் பட்டியலில் தொடர்புடைய *18.12.2004*-ஆம் தேதியிடப்பட்ட ம.ஆ.ப.தே..-இன் கோப்பு எண் எ.ஃப்.*6/18/2004*-ஏ.ஐ.எஸ்.-இன்படி முதல் எதிர்மேல்முறையீட்டாளரின் ஒட்டுமொத்த ஒப்பீட்டுமுறை மதிப்பீடானது "நன்று" எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. முதல் எதிர்மேல்முறையீட்டாளர் அவருடைய வகைப்படுத்துதல்/ஒட்டுமொத்த மதிப்பீட்டில்

திடீரென்று ஏன் குறைத்து மதிப்பிடப்பட்டுள்ளார் என்பது குறித்து காரணமேதும் பதியப்படவில்லையென உயர் நீதிமன்றம் தீர்மானித்தது. 2003-ஆம் ஆண்டின் தெரிவுப் பட்டியலில் "தகுதியற்றவர்" என வகைப்படுத்தப்பட்டவரான திரு. டி.கே. பொன்னுசாமி, 2004-ஆம் ஆண்டின் தெரிவுப் பட்டியலில் "மிக நன்று" எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளார். தேர்வுக் குழு இந்திய ஆட்சிப் பணிக்கு தனிநபர் மதிப்பீட்டின் வகைப்படுத்துதலில்/ ஒட்டுமொத்த மதிப்பிடுதலில் ஒரேசீரான தரநிலையைப் பின்பற்றவில்லை. இது, அவர்களின் தெரிவுக்கு நேரடியான விளைவைக் கொண்டுள்ளது என இது காட்டுகிறது.

22. தேர்வர்களை வகைப்படுத்தும் அதிகாரம் என்பது தேர்வுக் குழுவின் கடமையாகும். பதவி உயர்வு ஒழுங்குமுறை விதிகளின் விதிகள் 5(4) மற்றும் 5(5)-இன் கீழான தெரிவின் நடைமுறையில் தகுதிவாய்ந்த அலுவலர்கள் தொடர்பான ஒட்டுமொத்த ஒப்பீட்டுமுறை மதிப்பீட்டைச் செய்வதற்கும் அல்லது மூத்த அலுவலரைவிட முன்னுரிமையளித்து உயர் தகுதிகொண்ட இளநிலை அலுவலரைத் தேர்ந்தெடுப்பதற்கும் தேர்வுக் குழு காரணங்களைப் பதிவு செய்யவேண்டியதில்லை. ஆர்.எஸ். தாஸ் -எதிர்- யூனியன் ஆ.ஃப் இந்தியா மற்றும் பலர், 1986 (**சப்ளி.**) **எஸ்.சி.சி.** 617-இல் மூத்த அலுவலர் எவரும் மேற்புகுத்தீடு செய்யப்படுகிறபோது திருத்தப்பட்ட ஒழுங்குமுறை விதி, மேற்புகுத்தீட்டிற்கான காரணங்களை குழு பதிவு செய்யவேண்டியதில்லை என்று வேண்டுறுத்துகிறது என்றும், மேலும், மாநில குடிமைப் பணி அலுவலர்களின் மேற்புகுத்தீட்டிற்கான காரணங்களைத் தேர்வுக் குழு பதிவு செய்ய திருத்தப்பட்ட ஒழுங்குமுறை விதிகள் வேண்டுறுத்தவில்லை என்றும் உச்ச நீதிமன்றம் தீர்மானித்தது.

23. கே. ராஜையா என்ற வழக்கில் உச்ச நீதிமன்றம் ஆர்.எஸ். தாஸ் என்ற வழக்கினைக் குறிப்பிட்ட பின்னர் கீழ்க்கண்டவாறு தீர்மானித்துள்ளது:-

"9. நடுநிலை தவறாமை என்ற கோட்பாட்டினை உறுதியாகக் கடைப்பிடித்து, முதல் எதிர்மேல்முறையீட்டாளருக்கு குறைவான மதிப்பீடு அளிக்கையில் தேர்வுக் குழு காரணங்களைப் பதிவு செய்திருக்கவேண்டும் என்று உயர் நீதிமன்றத்தால் எடுக்கப்பட்ட கருத்தினை நாங்களும் ஆதரிக்கமுடியாது. உயர் நீதிமன்றம், நேஷனல் இன்ஸ்ட்டியூட் ஆ.ப் மென்டல் ஹெறல்த் மற்றும் நியூரோ சயின்ஸ் -எதிர்- டாக்டர் கே. கல்யாணராமன் 1992 சப்ளி. (2) எஸ்.சி.சி. 481-இல் இந்த நீதிமன்றத்தின் தீர்முடிவினைச் சார்ந்துநின்றது. உயர் நீதிமன்றத்தால் எடுக்கப்பட்ட கருத்தின் ஆதரவிலிருந்து விலகி மேற்படி தீர்முடிவு, தேர்வுக் குழுவின் பணி நிர்வாகத் தன்மையுடையதாக இருப்பதால் காரணங்களைப் பதிவு செய்வதற்கு தேர்வுக் குழுவின் கடமையை உணர்த்துகிற விதியோ, ஒழுங்குமுறை விதியோ இல்லாதபோது அதன் தீர்முடிவுக்கான காரணங்களைப் பதிவுசெய்யும் கடப்பாட்டில் இல்லை என்ற அறுதியுரையை வகுத்துரைத்தது. பின்னர் இந்நீதிமன்றம் கருத்துரைத்ததாவது: (எஸ்.சி.சி. 485, பத்தி 7)

"சட்டப்படியான வேண்டுறுத்தல் இல்லாதநிலையில் நபர் ஒருவரைத் தெரிவு செய்வதற்கான அல்லது தெரிவு செய்யாமல் இருப்பதற்கான காரணங்களைப் பதிவுசெய்ய நிருவாக அதிகாரியையோ, தேர்வுக் குழுவையோ, தேர்வாளரையோ இயற்கைநீதி

கோட்பாடுங்கூட வேண்டுறுத்துவதில்லை. இக்கோட்பாடு ஆர்.எஸ். தாஸ். -எதிர்- யூனியன் ஆ.ப் இந்தியா, 1986 சப்ளி. எஸ்.சி.சி. 617-இல் இந்நீதிமன்றத்தால் குறிப்பிடப்பட்டுள்ளது. (எஸ்.சி.சி. பக்கம் 633-இல்)....."

.....

சட்டநிலைப்பாடு அவ்வாறு இருக்கையில் முதல் எதிர்மேல்முறையீட்டாளரை ஏதோ ஒரு ஆண்டில் அவ்வாறு குறைத்து மதிப்பிட்டதற்காக நீதிமன்றத்தை குறைகூறக்கூடாது. சட்டப்படி கூறினால் "குறைத்து மதிப்பிடுதல்" என்ற சொல் ஒரு பொருத்தமற்ற சொல்லமைப்பாகும். "மிகவும் திறமையானவர்", "மிக நன்று", "நன்று" மற்றும் "தகுதியற்றவர்" என்று வகைப்படுத்தும் அதிகாரம் தேர்வுக் குழுவிடமே உள்ளது. அந்தப் பணி தெரிவுமுறைக்கு இடைநிகழ்வானதாகும். ஆண்டு இரகசியப்பணி அறிக்கைகளில் மாநில அரசு அதிகாரிகளால் அளிக்கப்படும் வகைப்படுத்துதல் குழுவைக் கட்டுப்படுத்தாது. ஐயத்திற்கிடமின்றி குழு மொத்தத்தில் மாநில அரசால் பின்பற்றப்படும் வகைப்படுத்துதலின்மூலம் வழிநடத்தப்படுகிறது. ஆனால், நற்காரணங்களுக்காக தேர்வுக் குழு, ஆண்டு இரகசியப்பணி அறிக்கைகளில் கொடுக்கப்பட்ட தரநிலையுடன் வேறுபடக்கூடிய தனது சுய வகைப்படுத்துதலை வெளியிடலாம். இதுதான் தற்போதைய வழக்கில் 1993-1994-ஆம் ஆண்டுக்கு

செய்யப்பட்டுள்ளது. அத்தகைய வழிப்படுத்துதல், தேர்வுக் குழுவின் மேதகு உரிமைக்குட்பட்டதால் காரணம் எதுவும் பதிவு செய்யப்படவேண்டியதில்லை. மாநில அரசுடனான தரநிலை வேறுபடும் பட்சத்தில் காரணங்களைப் பதிவு செய்வதே விரும்பத்தக்கதாகும். ஆனால், "ஒழுங்குமுறை விதி 5(4)-இன் கீழ் தேர்வுக் குழுவுக்கு அளிக்கப்பட்ட கடமைப்பணியின் தன்மை மற்றும் அதிகாரத்தைப் பொறுத்தவரையில் அலுவலர் ஒருவரை வகைப்படுத்துவதற்காக மாநில அரசின் முடிவுடன் மாறுபடும் காரணங்கள் பதிவு செய்யப்படவேண்டும் என்பது சட்டப்படியான தேவையில்லை என்பதாகும்." (அடிக்கோடிட்டு காட்டப்பட்டுள்ளது)

24. மேற்படி தீர்முடிவின் அகவுரை முற்றிலும் பொருந்துகிறது. தேர்வுக் குழு தனது சுய வகைப்படுத்துதலை வழங்கியிருக்கும்போது நீதிமன்றம் நிபுணர் குழுவால் செய்யப்பட்ட மதிப்பீட்டின் மீது மேல்முறையீட்டில் அமரமுடியாது. யூனியன் பப்ளிக் சர்வீஸ் கமிஷன் -எதிர்- எம். சத்திய பிரியா மற்றும் பலர், *(2018) 15* **எஸ்.சி.சி.** *796*-இல் உச்ச நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு தீர்மானித்தது:-

"17. தேர்வுக் குழு இக்களத்தில் நிபுணர்களைக் கொண்டுள்ளது. இது. ம.அ.ப.தே.-இன் தலைவர் அல்லது உறுப்பினர் ஒருவரால் தலைமை வகிக்கப்பட்டு இவ்விடயத்தில் மைய அரசு மற்றும் மாநில அரசின் நிபுணத்துவம்வாய்ந்த அலுவலர்களால் உரியமுறையில் சார்பாற்றப்படுகிறது. எங்களுடைய ஆழ்ந்தாராய்ந்த கருத்துப்படி, ஓர் உயர்மட்டக் குழு அல்லது வல்லுநர் குழு,

பதவி உயர்வுக்காக ஒவ்வொரு தேர்வர்களின் சிறப்புத் தகுதிகளை ஆராய்ந்து, தரநிலையை மதிப்பிட்டு அவர்களது வழக்கைப் பரிசீலித்திருக்கிறபோது மத்திய நிருவாகத் தீர்ப்பாயமும், உயர் நீதிமன்றமும் ஒரு மேல்முறையீட்டு அதிகாரமைப்பாக அமர்ந்துகொண்டு தேர்வுக் குழுவால் செய்யப்பட்ட மதிப்பீடு செய்வதற்கு வாய்ப்பில்லை. உரிய ஆவணங்களைக் கொண்டு எவ்வாறு வகைப்பாடுகள் மதிப்பிடப்படுகின்றன, மதிப்பீடு செய்வதில் எம்முறையான முறைகள் பயன்படுத்தப்படுகின்றன என்பது குறித்த வினா தேர்வுக் குழுவால் தனிப்பட்ட முறையில் தீர்மானிக்கப்படவேண்டும். சட்டப்படி தெரிவு செய்யும் அதிகாரவரம்பு தேர்வுக் குழுவிடம் உள்ளதாலும், தேர்வுக் குழு உறுப்பினர்கள் இவ்விடயத்தில் நிபுணத்துவம் வாய்ந்தவர்கள் என்பதாலும், மதிப்பீட்டு செயல்முறை ஒருசார்பானதாக, தீயயெண்ணத்தினாலானதாக, தன்னிச்சையானதாக போன்ற ஏதேனும் ஒன்றின் அடிப்படையில் பாதிக்கப்படும் சந்தர்ப்பங்களைத் தவிர, நீதிமன்றங்கள் பொதுவாக அவ்விடயங்களில் தலையிடுவது விரும்பத்தக்கதல்ல. நீதிமன்றம் தனக்கு முன்பாக உள்ள வழக்குகளை, தேர்வுக் குழுவின் தீர்முடிவுகளின் மீதான மேல்முறையீடுகளாகக்கருதி, அவற்றைக் கேட்பதும், தேர்வர்களின் ஒப்பீட்டுச் சிறப்புத் தகுதியை முன்னாராய்வதும் நீதிமன்றத்தின் பணியல்ல. ஒரு குறிப்பிட்ட பதவிக்கு ஒரு தேர்வர் தகுதியானவரா? இல்லையா?

<u>என்பதுகுறித்த வினா உரியமுறையில் அமைக்கப்பட்ட நிபுணர் குழுவான தேர்வுக் குழுவால் தீர்மானிக்கப்படவேண்டும். நீதிமன்றங்கள் அத்தகைய விடயங்களில் மிகவும் வரம்புக்குட்படுத்தப்படும் நீதிசார் மறுஆய்வு முறையைக் கொண்டுள்ளன."</u> *(அடிக்கோடிட்டு காட்டப்பட்டுள்ளது)*

25. இவ்வழக்கில், தேர்வுக் குழுவின் முடிவோ, முடிவெடுக்கும் நடைமுறையோ தன்னிச்சையான தன்மையினால் பாதிக்கப்படவில்லை என நாங்கள் அறிகிறோம். *2004*-ஆம் ஆண்டு மதிப்பீட்டில் முதல் எதிர்மேல்முறையீட்டாளர் குறைத்து மதிப்பிடப்பட்டதால் முதல் எதிர்மேல்முறையீட்டாளர் தெரிவுப் பட்டியலில் சேர்க்கப்படவில்லை. பணிப்பதிவேடுகளின் ஒட்டுமொத்த மதிப்பீட்டின்பேரில் அதனுடைய அளவு சட்டப்படியான வரம்புக்குட்பட்டிருப்பதன் காரணமாகவும், ஒழுங்குமுறை விதிகளின் ஒழுங்குமுறை விதி *5(5)* வகையங்களின்படி தெரிவுப் பட்டியலில் உயர்தர நிலைகளுடன் அலுவலர்கள் இருந்ததாலும் முதல் எதிர்மேல்முறையீட்டாளரின் பெயர் தெரிவுப் பட்டியலில் சேர்க்கப்படவில்லை. தேர்வுக் குழு வழக்கின் அனைத்து அம்சங்களையும் தங்களுக்கு உரிய கோணத்தில் மதிப்பிட இரங்கத்தக்கவகையில் தவறிவிட்டது என்றும், *2004*-ஆம் ஆண்டுக்கான இ.ஆ.ப. காலிப் பணியிடங்களுக்கான பதவி உயர்வுகள் பாதிப்புக்குள்ளாகிவிட்டன என்றும், அது மறுஆய்வு செய்யப்படவேண்டும் என்றும் உயர் நீதிமன்றம் தீர்மானித்தது சரியல்ல. உயர் நீதிமன்றத்தின் எதிர்ப்புக்குள்ளான தீர்ப்புரை நிலைநிறுத்தப்படமுடியாது மற்றும் நீக்கறவு செய்யப்படுவதற்குரியதாகும்.

26. முடிவில், நீதிப்பேராணை மனு எண் *33696/2007*-இல் மெட்ராஸ் உயர் நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட *17.4.2008*-ஆம் தேதியிடப்பட்ட எதிர்ப்புக்குள்ளான தீர்ப்புரை நீக்கறவு செய்யப்படுகிறது மற்றும் இம்மேல்முறையீடுகள்

அனுமதிக்கப்படுகின்றன. *26.11.2011*-ஆம் தேதியிடப்பட்ட அ.ஆ. நிலை எண் *1125* முதல் எதிர்மேல்முறையீட்டாளரால் எதிர்க்கப்பட்டதைப் பொறுத்தவரையில், அது அதற்குரிய தகுதியின்பேரில் இத்தீர்ப்புரையில் தெரிவிக்கப்பட்ட கருத்துகளின் தாக்கத்திற்கு உள்ளாகாமல் பரிசீலிக்கப்படவேண்டும்.

மாண்புமிகு நீதியரசர் திருமதி ஆர். பானுமதி

மாண்புமிகு நீதியரசர் திரு. எ.எஸ். போபண்ணா

மாண்புமிகு நீதியரசர் திரு. உறிரிஷிகேஷ் ராய்

புது தில்லி,

15.11.2019.

.....

<u>உரிமைத்துறப்பு</u>

"வட்டார மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட இத்தீர்ப்புரையானது, வழக்காடி, தன்னுடைய மொழியில் புரிந்துகொள்வதற்கு பயன்படுத்திக்கொள்வதற்குட்பட்டதேயன்றி, வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்திக்கொள்ளலாகாது. அனைத்து நடைமுறையான மற்றும் அலுவல்முறையான நோக்கங்களுக்கும் மற்றும் தீர்ப்புரையை நிறைவேற்றலுக்கும், செயற்படுத்தலுக்கும் அதன் ஆங்கிலப் பதிப்பே அதிகாரப்பூர்வமானதாகும்."